**ஊவா மாகாண சபை - 2015**

ஊவா மாகாண சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, ஊவா மாகாண சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 மாகாண சபை நிதியம்

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் கணக்கு 2015 மார்ச் 15 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

#### 2.2.2 ஏனைய கணக்குகள்

2016 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்க ப்பட்ட கணக்கு களின் எண்ணிக்கை | சமர்ப்பிக்க ப்படாத கணக்கு களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 29 | 29 | - |
| (ii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 29 | 29 | - |
| (iii) | வருமானக் கணக்குகள் | 01 | 01 | - |
| (vi) | வணிக முற்பணக் கணக்குகள் | 09 | 09 | - |
| (v) | நிதியக் கணக்குகள் | 10 | 08 | 02 |
| (vi) | நியதிச்சட்டக் கணக்குகள் | 02 | 01 | 01 |
| (vii) | மாகாணசபை உறுப்பினர் முற்பணக் கணக்கு | 01 | 01 | - |
| | | 81 | 78 | 03 |

### 2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 2013 சனவரி 24 ஆந் திகதிய எஸ்எஸ்/ஏஎஸ்/ஏஏ ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு முதல் வருடாந்த கணக்குகள் அட்டுறு அடிப்படையின் கீழ் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் கணக்குகள் தயாரிக்கும் போதும் ஊவா மாகாண சபை அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மாகாண சபையின் ஆரம்பம் முதல் மத்திய அரசாங்கத்தினாலும் மாகாண சபையினாலும் நிலையான சொத்துக்களுக்காக கவனத்திற்கொள்ளக் கூடிய செலவினமொன்று செய்யப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 469,849,989 தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிலையான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் கணக்கீட்டுக் கொள்கை மூலம் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 மாகாண சபையின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டின் போது ஊவா மாகாண சபையின் அச்சகத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த நிரந்தர பதவியணியினருக்காகச் செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா 3,327,451 தொகை ஊவா மாகாண பிரதம அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், சமாதானம், கல்வி, உள்ளூராட்சி, காணி, கலாசாரம், சமூகநலன்புரி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிர்மாண அமைச்சின் கீழ் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கும் போது ஊவா மாகாண அச்சக முற்பணக் கணக்கிலும் செலவினமொன்றாகக் கணக்கீடு செய்யப்பட்டமையினால் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் அந்த செலவினம் இருதடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) வாடகைக் கொள்வனவு வசதியின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனத்திற்கான தவணைப்பணம் செலுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டிற்குரிய வட்டி ரூபா 72,438 தொகை ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) ஊவா மாகாண இறைவரி ஆணையாளர் திணைக்களத்தின் 2014 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறுதி மீதி ரூபா 4,295,789 தொகை 2015 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 2,625,529 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 1,670,260 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஊவா மாகாண இறைவரி ஆணையாளர் திணைக்களத்தின் 2014 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் கட்டுநிதிக் கணக்குகள் தொடர்பான பொழிப்பு அறிக்கையில் காணப்படுகின்ற ரூபா 2,124,715 தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி 2015 ஆம் ஆண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு ஒதுக்கீட்டுக் கணக்கில் கட்டுநிதி கணக்குகள் தொடர்பான பொழிப்பு அறிக்கையில் ஆரம்ப மீதியாக முன்கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அதனால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல்

உள்ளவாறு தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி அந்த அளவினால் குறைத்து ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ஊவா மாகாண பிரதி பிரதம செயலாளர் (நிதி முகாமைத்துவம்) அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு அறிக்கையில் ரூபா 9,806,218 கூட்டுத்தொகை 2015 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 9,711,634 ஆக ரூபா 94,584 தொகை குறைத்து முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஈ) ஊவா, மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆண்டின் போது மொத்த செலவு வைத்தல்கள் ரூபா 8,753,012 ஆக இருக்க வேண்டிய போதிலும், ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் கூட்டுநிதிக் கணக்குகள் தொடர்பான பொழிப்பு அறிக்கையில் ரூபா 9,202,040 ஆக ரூபா 449,028 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.6 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் உரிய தீர்க்கப்படாத கட்டுநிதி மீதிக்கு உரிய நிறுவனங்களின் கணக்குகளின் பிரகாரமான மீதிக்குமிடையே 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேறுபாடு ரூபா 7,988,079 ஆக இருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட 03 நிறுவனங்களின் பொது வைப்புக் கணக்கு மீதிக்கும் அந்த நிறுவனங்களின் கணக்குகளின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறான நேரொத்த மீதிகளுக்குமிடையே ரூபா 13,603,060 தொகையான வேறுபாடொன்று காணப்பட்டது.

(இ) ஊவா மாகாண சபையின் 04 நிறுவனங்களின் மாகாண அரச உத்தியோகத்தர்களின் கடன் மற்றும் முற்பணக் கணக்குகளின் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்புக்களின் கூட்டுத்தொகைக்கும் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதிகளுக்குமிடையே ரூபா 44,995,380 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஈ) கூட்டுறவு ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாகாண அரச உத்தியோகத்தர்களின் கடன் மற்றும் முற்பணக் கணக்கின் திணைக்களப் புத்தங்களின் பிரகாரம் மீதி ரூபா 1,654,259 ஆக இருந்த போதிலும், மாகாண திறைசேரி அறிக்கையின் பிரகாரம் அந்த மீதி ரூபா 1,869,114 ஆனமையால் ரூபா 214,855 வேறுபாடு காணப்பட்டது.

(உ) கூட்டுறவு ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் மற்றும் முற்பணக் கணக்குகளின் தனிப்பட்ட கடன் மீதிகளில் திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் கூட்டுமொத்தம் ரூபா 1,867,834 ஆக இருந்த போதிலும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பில் கூட்டுமொத்தம் ரூபா 1,770,284 ஆனமையால் ரூபா 97,550 வேறுபாடு காணப்பட்டது.

(ஊ) பிரதி பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) அலுவலகத்தின் புத்தகங்கள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பிரதேச செயலகங்களுக்காக 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகளின் கூட்டுத் தொகை ரூபா 35,092,572 ஆக இருந்த போதிலும், மாகாண திறைசேரி கணனி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் அந்த நிதி ஏற்பாட்டின் கூட்டுமொத்தம் ரூபா 38,576,000 ஆனமையால் ரூபா 3,483,428 வேறுபாடொன்று காணப்பட்டது.

(எ) ஊவா மாகாண ஆளுனர் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கில் காணப்படுகின்ற பொது வைப்புக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 18,839 இனாலும் ஆண்டின் வரவு ரூபா 128,907 இனாலும், ஆண்டின் செலவு வைத்தல் ரூபா 70,102 இனாலும் மற்றும் இறுதி மீதி ரூபா 68,644 இனாலும் மாகாணசபை ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் நெரொத்த பெறுமதிக்கும் இடையே வேறுபாடு காணப்பட்டது.

(ஏ) சபை செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கில் முற்பணக் கணக்கிற்கும் வைப்புக் கணக்கிற்குமான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பொழிப்பின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் மீதி ரூபா 11,847,539 ஆக இருந்த போதிலும், ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 10,915,204 ஆக இருந்தமையால் ரூபா 932,335 வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஐ) பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்) அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுநிதிக் கணக்குகள் தொடர்பான பொழிப்பு அறிக்கையில் காணப்படுகின்ற கட்டுநிதிக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 4,418,699 இனாலும், ஆண்டின் போது மொத்த வரவு வைத்தல் ரூபா 352,265 இனாலும் ஆண்டின்போது மொத்த செலவு வைத்தல் ரூபா 328,875 இனாலும், இறுதி மீதி ரூபா 4,418,699 இனாலும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற நேரொத்த மீதிகளுக்கிடையே வேறுபாடு காணப்பட்டது.

(ஒ) மாகாண இறைவரி ஆணையாளர் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கில் முற்பணக் கணக்கிற்கும் வைப்புக் கணக்கிற்குமான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பொழிப்பில் காணப்படுகின்ற திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 103,298 இனாலும் ஆண்டின் போதான வரவு வைத்தல் ரூபா 9,906,306 இனாலும் ஆண்டின் செலவு வைத்தல் ரூபா 1,172,311 இனாலும் மற்றும் இறுதி மீதி ரூபா 959,095 இனாலும் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண ‘‘பீ’’ கணக்கின் மீதிகளுக்கிடையே வேறுபாடு காணப்பட்டது.

(ஓ) மாகாண கல்வித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட முற்பணக் கணக்கினதும், பொது வைப்புக் கணக்கினதும் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பொழிப்பு அறிக்கையில் பொது வைப்புக் கணக்கில் ஆண்டின் மீதியில் வரவு வைத்தல் ரூபா 4,198,677 இனாலும் செலவு வைத்தல் ரூபா 4,461,177 இனாலும் மற்றும் இறுதி மீதி ரூபா 8,659,854 இனாலும் மாகாண திறைசேரியின் அறிக்கையிடையே வேறுபாடுகள் காணப்பட்டன.

(ஔ) மாகாண இறைவரி ஆணையாளர் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கின் டீ.ஜீ.எஸ்.ஏ.2 ஆம் படிவத்தில் நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றங்கள் நிரலில் கூட்டுமொத்தமாக ரூபா 1,312,092 தொகை மற்றும் டீ.ஜீ.எஸ்.ஏ.3 ஆம் படிவத்தில் அந்த நிரலின் மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 12,000 ஆனமையால் ரூபா 1,300,092 வேறுபாடு காணப்பட்டது.

(க) ஊவா மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கடன் மீதியைக் கையேற்கும் போது முறையான பதிவு இல்லாமை மற்றும் அதன் பின்னர் அந்த மீதியை நாளதுவரையாக்கப்படாமையினாலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத் தொகைக்கும் கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆண்டின் இறுதி மீதிக்கும் இடையே ரூபா 300,192 வேறுபாடொன்று காணப்பட்டது.

(கா) ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கடன் மீதியைக் கையேற்கும் போது முறையான பதிவு செய்யாமை மற்றும் அதன் பின்னர் அந்த மீதிகள் நாளதுவரையாக்கப்பட்டாமையினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை ரூபா 271,108,430 ஆகவும் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 278,119,235 ஆகவும் இருந்தமையால் ரூபா 7,010,805 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

**2.2.7 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களாகக் காண்பிக்கப்பட்ட விதை உருளைக் கிழங்குக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்பட்டோர் மீதி ரூபா 40,869,376 தொகை 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 10 வருடங்களுக்கு முன்னர் விவசாயத் திணைக்களத்தில் ஏற்பட்டிருந்த ரூபா 440,990 காசு மோசடி 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் தீர்த்து வைக்கப்படாத மீதியொன்றாக ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.8 கட்டுநிதிக் கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் புத்தகங்களின் படி காணப்பட்ட ரூபா 289,471 தொகையான கட்டுநிதி மீதியொன்று ஊவா மாகாண சபையின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊவா மாகாண சபையின் 04 நிறுவனங்களில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 19,755,852 கூட்டுத்தொகையான கட்டுநிதி மீதி மாகாண நிதி விதி 366.5 இன் பிரகாரம் மாகாணத் திறைசேரிக்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.9 பொது வைப்புக் கணக்குகள்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்பு மீதிகள் தொடர்பான காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 21 நிறுவனங்களுக்குரிய ரூபா 66,347,999 கூட்டுத்தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலாவதியான வைப்பு மீதி நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் ஓய்வு பெறச் செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.10 மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாணசபையின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மாகாண அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளின் மீதி ரூபா 1,321,591,714 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாது காணப்படுகின்ற 06 கணக்குகளுக்குரிய ரூபா 3,881,161 கூட்டுத்தொகையான வரவு மீதியொன்றும் 03 கணக்குகளுக்குரிய ரூபா 1,520,663 கூட்டுத்தொகையான செலவு மீதியும் காணப்பட்டன.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாண சபையின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் உரிய மாகாண அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளின் மீதிக்கும் அந்த நிறுவனங்களின் கணக்குகளின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறான நேரொத்த மீதிகளுக்குமிடையே ரூபா 461,008,732 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(இ) ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மீளாய்வாண்டிற்கான செலவினத்தின் ஆகக்கூடிய எல்லை ரூபா 160,000,000 ஆக இருந்த போதிலும், ஆண்டின் போது மொத்த

வரவு வைத்தல் ரூபா 163,203,342 ஆனமையால் செலவினத்தின் ஆகக்கூடிய எல்லை ரூபா 3,203,342 இனால் விஞ்சியிருந்தது.

**2.2.11 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

ப/பதுளுதென வித்தியாலயத்தின் திறன் பயன்படுத்தல் கணக்கிற்குரிய வங்கிக்கூற்றின் பிரகாரம் 2011 நவம்பர் முதல் 2012 பெப்ரவரி மாதம் வரை வங்கிக் கணக்கிலிருந்து செலுத்தப்பட்டிருந்த ரூபா 184,405 தொகை செலவிடப்பட்ட முறையை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.12 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) தாபன விதிக்கோவை | |
| (i) XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவு | (i) நிரல்படுத்தப்பட்ட வீடு உரித்துள்ள 05 உத்தியோகத்தர்களிடமிருந்து 2014 யூன் முதல் 2015 திசெம்பர் வரை ரூபா 49,529 தொகையான வீட்டு வாடகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது.<br><br>(ii) சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு மற்றும் பெண்கள் விவகார அமைச்சின் உத்தியோகத்தரிடமிருந்து வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பிரிவு | பண்டாரவல வலய கல்வி அலுவலகத்திற்குரிய 31 பாடசாலைகளின் ஆசிரியர் மற்றும் அதிபர் விடுதிகளிலிருந்து சிக்கன வாடகை மதிப்பிடப்பட்டு அறவிடுவதற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iii) XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | மாகாணசபையின் அமைச்சுக்கள் மற்றும் 08 திணைக்களங்களில் மரணமடைந்த, ஓய்வுபெற்ற, சேவையை விட்டுச் சென்ற மற்றும் வேலை நீக்கஞ் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 8,772,792 கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) ஊவா மாகாண சபை நிதி விதிக்கோவை

(I) விதி 137, 138 — மொனராகலை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் 26 உத்தியோகத்தர்களுக்கு 2015 ஆம் ஆண்டிற்குரிய சீருடைப்படி செலுத்துவதற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(II) விதி 215(3)(1) — ஏதாவது வேலை விடயமொன்றின் கீழ் நடப்பாண்டில் நிதிஏற்பாட்டின் ஒரு பகுதியை எதிர்வரும் வருடங்களில் கொடுப்பனவு செய்யும் எதிர்ப்பார்ப்பில் ஒதுக்கம், பொது வைப்பு அல்லது தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட முடியாதிருந்த போதிலும் பிரதி பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) அலுவலகத்தினால் வெளிநாட்டுப் பிரயாணங்களைச் செய்வதற்காக பொது வைப்புக் கணக்கிற்கு ரூபா 23,804,052 நிதிஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது.

(III) விதி 751 — ஹப்புத்தளை சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்திற்கும் சிக்ச்சை நிலையங்களுக்கும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 118,800 பெறுமதியான 33 கொங்கிரீட் வங்குகள் 2015 திசெம்பர் 04 ஆந் திகதி வரையிலும் பொருத்துதல் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.

(IV) விதி 751(1) — மொனரகாலை வலய கல்வி அலுவலகத்தில் முறையற்ற கற்கைப் பாடநெறிக்காக முன்னைய ஆண்டின் மார்ச் 17 ஆந் திகதி கிடைத்த ரூபா 221,142 பெறுமதியான 68 கற்பித்தல் உபகரணங்கள் இருப்புப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை

1/2014 - 2014 சனவரி 01 — ஊவா மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் 11 திணைக்களங்களில் ஊழியர் பயிற்சி மற்றும் இயலுமை அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட ரூபா 12,864,187 தொகையான செலவினம் 2401 ஆம் இலக்க மூலதன செலவின விடயத்தில் வரவு வைக்கப்படாது 1102 ஆம் இலக்க மீண்டெழும் செலவினத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (ஈ) | ஏனைய சுற்றறிக்கைகள்<br>----------------------------------------------<br>ஓய்வூதியப் பணிப்பாளரின் 2010/05/25 ஆம் திகதிய 01/2010 ஆம் இலக்க சுற்றறிக்கை | மொனராகலை பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 2015 மார்ச் முதல் ஆகஸ்ட் வரை அமைய சேவையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்காகச் செலுத்த வேண்டிய அரச ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புப் பணம் ரூபா 230,288 செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் 2013 செப்தெம்பர் 01 ஆந் திகதிய Sec/2013/07 ஆம் இலக்கம் மற்றும் 2015 யூலை 06 ஆந் திகதிய Sec/2015/05 ஆம் இலக்க சுற்றறிக்கைகள் | ஊவா மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் 02 திணைக்களங்களில் 15 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 221,602 தொகையான உழைக்கும் போதே வரி அறவிட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படாமையினால் அதற்குரிய ரூபா 22,160 தண்டப்பணத்தையும் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. |

## 3. வருமான முகாமைத்துவம்

--------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக ஊவா மாகாண சபையின் மதிப்பிடப்பட்ட வரி வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே ரூபா 24,645,959 பாதகமான முரணொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 02 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட உள்ளபடியான வருமானத்தின் குறைவு 25 சதவீதம் மற்றும் 94 சதவிதமாக இருந்தது.

(இ) மாகாண இறைவரி ஆணையாளர் திணைக்களத்தால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,467,280 தொகையான வருமானமொன்று மாகாண திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒன்றிணைந்த வருமானக் கணக்கில் காணப்படுகின்ற மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்தத் தேறிய வருமானம் மாகாண திறைசேரி பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகங்கள் மற்றும் காணி ஆணையாளர் திணைக்களத்தின் வருமானக் கணக்குகளின் கூட்டுத்தொகையுடன் முறையே ரூபா 22,906 இனாலும், ரூபா 47,825 இனாலும் மற்றும் 29,282,512 இனாலும் இணங்கியிருக்கவில்லை.

(உ) மாகாண இறைவரி ஆணையாளர் திணைக்களத்தின் வருமானக் கணக்கில் முத்திரை வரி வருமானம் ரூபா 1,130,282 இனாலும், வியாபாரப் புரள்வு வரி வருமானம் ரூபா 83,171 இனாலும் மற்றும் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 10,011,447 இனாலும் மாகாண திறைசேரியின் வருமானப் பதிவேட்டுடன் இணங்கியிருக்கவில்லை.

(ஊ) மாகாண நிதி விதி 142.1 இன் பிரகாரம் ஊவா மாகாண சபைக்கு கிடைக்க வேண்டிய பணம் தொடர்பில் வருமான மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) ஊவா பறணகம அம்பகஸ்தோவ மக்கள் வங்கிக் கிளைக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட காணிக்காக அறவிடவேண்டிய ரூபா 174,800 நிலுவை வரித்தொகை ஊவா பறணகம பிரதேச செயலகத்தினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தணமல்வில் பிரதேச செயலகத்தினால் நீண்டகால குத்தகை முறையின் கீழ் அரசாங்கத்தின் காணிப்பகுதியொன்று குடியிருப்பு மற்றும் வணிக நடவடிக்கைகளுக்காக நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. காணி ஆணையாளரின் 1998 திசெம்பர் 17 ஆந் திகதிய 4/10/15824 ஆம் இலக்க கடிததத்தின் பிரகாரம் காணியின் தற்போதைய வணிகரீதியான பெறுமதியில் 04 சதவீதம் வருடாந்த வரியாக அறவிடப்பட வேண்டியவை அறிவிக்கப்பட்டிருக்கும் போது அபிவிருத்தியடையாத பெறுமதியின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட்டமையினால் 1998 செப்தெம்பர் 17 ஆந் திகதி முதல் 2015 செப்தெம்பர் 17 ஆந் திகதி வரையான காலத்தில் ரூபா 1,701,900 வாடகைப் பணம் குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ஐ) மெதகம பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திற்குரிய அரசாங்கத்தின் காணியொன்று வருடாந்தம் அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் குடியிருப்பு வசதிகளுக்காக 2008 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 84,000 நிலுவை வாடகைப் பணம் 2015 யூலை 06 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஒ) அரசாங்கத்தின் மதிப்பீட்டாளரினால் 2014 ஆம் ஆண்டில் மொனராகலை பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான 18 வீடுகளின் சிக்கன வாடகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகபூர்வ வீடுகளிலிருந்து புதிய மதிப்பீட்டு வாடகை அறவிடப்படாமையினால் ரூபா 203,235 தொகையான வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

## 4. நிதி மீளாய்வு

### 4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 19,060,020,997 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 15,720,806,957 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 3,339,214,040 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

### 4.2 வருமானம் மற்றும் செலவினம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பான பொழிப்பொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

**வருமானம்**

| | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மாகாண சபை விடயங்களுக்குரிய வருமானம் | | | | | | |
| வரி வருமானம் | 2,370,600,000 | 2,345,954,041 | (24,645,959) | 2,102,456,000 | 2,051,316,974 | (51,139,026) |
| வரியல்லா வருமானம் | 234,400,000 | 381,233,297 | 146,833,297 | 277,544,000 | 545,164,047 | 267,620,047 |
| அரசாங்க மானியம் | 16,336,170,000 | 19,120,042,171 | 2,783,872,171 | 19,380,202,600 | 16,432,566,144 | (2,947,636,456) |
| மொத்தம் | 18,941,170,000 | 21,847,229,509 | 2,906,059,509 | 21,760,202,600 | 19,029,047,165 | (2,731,155,435) |

**செலவினம்**

| | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதிடப் பட்டவை | உள்ள படியானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ள படியானவை | முரண் |
| மீண்டெழும் செலவினம் | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஆளணி வேதனம் | 11,513,998,000 | 15,212,553,092 | 3,698,555,092 | 11,289,865,552 | 11,053,931,370 | 235,931,182 |
| ஏனைய மீண்டு வருபவை | 3,673,002,000 | 3,378,081,841 | (294,920,159) | 3,716,408,098 | 2,815,402,656 | 901,005,442 |
| உப மொத்தம் | 15,187,000,000 | 18,590,634,933 | 3,403,634,933 | 15,006,270,650 | 13,869,334,026 | 1,136,936,624 |
| அரசாங்க முதலீடு | 3,736,170,000 | 3,196,573,402 | (539,596,598) | 4,995,084,591 | 4,447,953,952 | 547,130,639 |
| மொத்தம் | 18,923,170,000 | 21,787,208,335 | 2,864,038,335 | 20,001,355,241 | 18,317,287,978 | 1,684,067,263 |

மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவினம் ரூபா 21,787,208,335 ஆக இருந்ததுடன் அதில் 85 சதவீதம் மீண்டெழும் செலவினமாகவும் 15 சதவீதம் மூலதனச் செலவினமாகவும் இருந்தன.

## 5. நிதியத்தின் கணக்குகள்/ அதிகாரசபைக் கணக்குகள் மற்றும் வணிக முற்பணக் கணக்குகள்

### 5.1 நிதியக் கணக்குகள்

#### 5.1.1 ஆளுநரின் நிதியம்

2015 ஆம் ஆண்டின் வருடாந்த நிதிக்கூற்றில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,500,000 தொகை ஊவா மாகாண ஆளுநர் அலுவலகத்தினால் ஆளுநரின் நிதியத்திற்கான சேமிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்தப் பணம் நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.1.2 பிரதம அமைச்சர் நிதியம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 2,500,000 பெறுமதியான நிலையான வைப்புக்களை மீள முதலீடு செய்யும் போது நிதியத்திற்கு சாதகமான வட்டி வருமானமொன்றை உழைக்கக் கூடிய வகையில் நிதிச் சந்தை வட்டி விகிதம் தொடர்பாக விசாரணை செய்து வினைத்திறனானதாக முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது பிரதம அமைச்சர் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட மருத்துவ நிதியுதவி ரூபா 2,175,000 தொகை கல்வி நிதியுதவி ரூபா 874,000 மற்றும் வறுமைக்கான உதவியளிக்கும் நிதியுதவி ரூபா 25,000 தொகை என்பன உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டமை பின்ஆய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 5.1.3 அவசர சந்தர்ப்ப நிதியம்

1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 20(3) ஆம் பிரிவின் பிரகாரம் அவசர சந்தர்ப்ப நிதியத்தின் பொறுப்பு, நிதியத்தின் பணக் கொடுப்பனவு, நிதியை ஒதுக்குதல் மற்றும் தொடர்புடைய அல்லது அதற்கு இணையான விடயங்கள் தொடர்பாக ஆளுநரினால் விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.1.4 இந்து கலாசார அலுவல்கள் தொடர்பான நிதியம்

1991 இன் 03 ஆம் இலக்க இந்து கலாசார அலுவல்கள் தொடர்பான சட்டத்தின் 2 ஆவது பிரிவின் பிரகாரம் தாபிக்கப்பட்ட நிதியத்தின் நோக்கங்கள் மீளாய்வாண்டின் போதும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 5.1.5 பௌத்த அலுவல்கள் தொடர்பான அபிவிருத்திச் சபை

1993 இன் 01 ஆம் இலக்க ஊவா மாகாண பௌத்த அலுவல்கள் தொடர்பான அபிவிருத்தி சபை (கூட்டிணைக்கப்பட்ட) சட்டவிதியின் 04 ஆவது பிரிவின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய 10 பொது நோக்கங்களில் 09 நோக்கங்கள் மீளாய்வாண்டின் போதும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 5.1.6 வீடமைப்பு அபிவிருத்தி நிதியம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட நிதியத்தின் வேறுபாடுகள் தொடர்பான கூற்றின் பிரகாரம் 2015 சனவரி 01 இல் உள்ளவாறு மீதி ரூபா 7,383,831 ஆக இருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 9,348,643 ஆனமையால் ரூபா 1,964,812 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற பிரதேச அபிவிருத்தி வங்கிக் கடன் தவணை அறவீடுகள் ரூபா 1,110,546 தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.1.7 கூட்டறவு அபிவிருத்தி நிதியம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக தேவையான பேரேட்டுக் கணக்குகள் தயாரிக்கப்படாமையினால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிதி ரீதியான பெறுமதிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 547,079 தொகையான உபகரணங்களின் பெறுமதி நிதி நிலைமைக்கூற்றில் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் ரூபா 2,086,097 தொகையான வருமான மிகை கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தில் ரூபா 2,075,097 ஆக சீராக்கப்பட்டமையினால் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் மீதி ரூபா 11,000 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களுக்குரிய ரூபா 765,630 பெறுமதியான மீதி மற்றும் கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வு செய்வதற்கான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2011 இன் 03 ஆம் இலக்க ஊவா மாகாண கூட்டுறவுச் சங்க சட்ட விதியின் 43(ii) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட சங்கங்களும் வருடாந்த தேறிய இலாபத்தில் பத்து சதவீதத்திற்கு மேற்படாத மற்றும் ரூபா 100 இற்கு குறையாத தொகையொன்று கூட்டுறவு நிதியத்திற்கு பங்களிப்புப் பணமாக வருடந்தோறும் செலுத்த வேண்டியிருந்த போதிலும் பதிவு செய்யப்பட்ட 1256 சங்கங்களில் 100 சங்கங்கள் மாத்திரம் பங்களிப்புப் பணம் செலுத்தியிருந்தன.

### 5.1.8 ஊவா மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிபில பேருந்து நிலைய அபிவிருத்தி நிதியம் என்ற யெயரில் பதுளை மக்கள் வங்கியில் காணப்படுகின்ற ரூபா 325,000 நிதிய மீதி நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாணத்தில் பிரயாணத்தில் ஈடுபடுகின்ற பேருந்துக்களிலிருந்தும் மாகாணங்களுக்கிடையிலான பேருந்துகளிலிருந்தும் 2015 செப்தெம்பர் மாதம் வரையில் ரூபா 1,425,920 தொகையான லொக் பத்திரக் கட்டணம் மற்றும் நுழைவுக் கட்டணம் என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பதுளை பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் பிரகாரம் 178 பதிவு செய்யப்பட்ட பேருந்துகளில் நடத்துனர் அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்படாதிருந்தமையினால் அதிகாரசபைக்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 302,600 ஆக இருந்தது.

(ஈ) 2015 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையினால் 53 புதிய வீதி அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் புதிய வீதி அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கும் போது முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் பெறுகைகள் நடைமுறைகளைப் பின்பற்றி போட்டியாளர் விலையின் கீழ் அனுமதிப்பத்திரத்தை விநியோகித்து வருமானத்தை அதிகரிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 2008 ஆகஸ்ட் 02 ஆந் திகதி அதிகாரசபையின் பணிப்பாளர்சபை தீர்மானத்தின் பிரகாரம் அதிகாரசபையின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற பேரூந்துகளுக்கு நுழைவுப் பத்திர இயந்திர முறைமை அமுல்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நுழைவுச்சீட்டு இயந்திரங்களை பேரூந்துகளில் அறிமுகப்படுத்துவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

**(ஊ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்வற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| 2001 இன் 01 ஆம் இலக்க ஊவா மாகாண பிரயாணிகள் போக்குவரத்துச் சேவை அதிகாரசபை தொடர்பான சட்டவிதியின் 21 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தாபிக்கப்பட்டிருக்க வில்லை. |
| ஊவா மாகாண சபை நிதி விதி 431.7.2 | 2001 இன் 01 ஆம் இலக்க ஊவா மாகாண பிரயாணிகள் போக்குவரத்துச் சேவை அதிகாரசபை தொடர்பான சட்டவிதியில் கணக்காய்விற்குரிய நிதிஏற்பாடு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

**(எ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) வீதிகளில் பிரயாணத்திலீடுபடுகின்ற பேரூந்துகளின் ஓட்டக் காலத்தைக் குறைக்கும் வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் வீதியைக் காபட் இடுதல் ஒரு நோக்கமாக இருந்த போதிலும், ஊவா மாகாணத்தில் காபட் இடப்பட்டுள்ள அவ்வாறான வீதிகளில் ஓட்டத்தில் ஈடுபடுகின்ற ஊவா மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபையில் பதிவு செய்துள்ள பேரூந்துகளின் ஓட்டக் காலத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1983 இன் 12 ஆம் இலக்க நுகர்வோர் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க ஊழியர் பணிக்கொடை கொடுப்பனவிற்காக ஏற்படக்கூடிய பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக நிதியமொன்று தாபிக்கப்பட்டிருக்க வில்லை.

## 5.2 வணிக முற்பணக் கணக்குகள்

### 5.2.1 தச்சுப்பாடசாலை முற்பணக் கணக்கு

உற்பத்திக்காக குறிப்பாக இனங்காணக் கூடிய மின்சாரம், நீர் மற்றும் நிலையப் பொறுப்பு மதியுரையாளர் சம்பளச் செலவினம் ரூபா 8,555,576 தொகையான உற்பத்தி, வியாபார, இலாபநட்டக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக கருதுகோள் கட்டணக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2.2 இலகு பொறியியல் முற்பணக் கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலகு பொறியியல் வணிக முற்பணக் கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதிப் பகுப்பாய்வின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி மீதிக்கும் காசோட்டின் மீதிக்குமிடையே ரூபா 2,017,782 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்களினதும் காவலாளர்களிலிருந்தும் சம்பளம் ரூபா 887,821 தொகையும் நீர் மற்றும் மின்சாரச் செலவினம் ரூபா 23,113 தொகை தனித்தனியாக இனங்காணக் கூடியதாக இருக்கும் போது அந்த செலவினங்கள் உற்பத்தி மற்றும் இலாபநட்டக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக கருதுகோள் கட்டணக் கணக்கில் உள்ளடக்கப்பட்டமையினால் ஆண்டின் இலாபம் ரூபா 497,583 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2.3 மாவட்ட இயந்திர வேலைத்தளத்திற்கான முற்பணக் கணக்கு

வருடாந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மாவட்ட இயந்திர வேலைத்தளத்திற்கான முற்பணக் கணக்குகள் நடவடிக்கைகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 40,000,000 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின்போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 27,647,654 ஆக இருந்தமையால் ரூபா 12,352,346 இனால் ஆகக் குறைந்த செலவு எல்லை அடையப்பட்டிருக்கவில்லை

### 5.2.4 கலைசார்ந்த கைப்பணி முற்பணக் கணக்கு

மீளாய்வாண்டிற்காக செலுத்தப்பட்ட நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் ரூபா 42,509 தொகை மற்றும் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் மற்றும் காவலாளி சம்பளம் ரூபா 5,167,236 தொகை உற்பத்தி கணக்கில் தொழிற்சாலை பொதுமேந்தலை கிரய கணிப்பீட்டின் போது கவனத்திற் கொள்ளப்படாதிருந்ததுடன் அந்தச் செலவினங்கள் கருதுகோள் கட்டணக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 5.2.5 ஒக்கம்பிட்டிய நாற்று மேடை வணிக முற்பணக் கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் பூர்த்தியடையாத பொருட்களின் பெறுமதி மொத்த உற்பத்திக் கிரயத்தின் அடிப்படையில் அறவிடப்பட்டதாக குறிப்பிடப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறும் 03 மாதங்களான நாற்றுமேடையின் பெறுமதியைக் கணிப்பிடுவதற்காக அதற்குரிய தொழிலாளர் ஊழியம் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நாற்று மேடையில் உள்ளடக்கப்பட்ட வேண்டிய பசளை, மருந்து மற்றும் விசிரும் பக்கட்டுக்கள் போன்ற பொருட்களின் பெறுமதி உள்ளடக்கப்படாமையினால் கணிப்பிடப்பட்ட ரூபா 811,069 தொகையான நாற்று மேடையின் பெறுமதி சரியானதாக இருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களுக்குரிய பொதுப் பேரேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட நடப்பாண்டில் சேர்த்தல்களின் உள்ளபடியான செலவினம் ரூபா 3,517,685 ஆக இருந்த போதிலும் அதன் மதிப்பிடப்பட்ட பெறுமதியான ரூபா 7,091,493 தொகை

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமையால் நடப்பாண்டில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 3,573,808 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பாவனையிலிருந்து அகற்றப்பட்ட காலப்பகுதியை குறிப்பாக இனங்காண முடியாத 9 டிரெக்டர், 5 சைக்கிள்கள், புல்லுவெட்டும் இயந்திரமொன்று மற்றும் விதை நெல் தயாரிக்கும் இயந்திரமொன்று என்பன மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நாற்று மேடை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த சொத்துக்கள் தொடர்பான பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தற்போது பயன்படுத்தப்படுகின்ற டிரெக்டர் மற்றும் இயந்திரங்களுக்காக பயன்படுத்த முடியாத 1347 உதிரிப்பாக விடயங்கள் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த உதிரிப்பாகங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறைக் கணக்கில் ரூபா 33,301,727 தொகையான மீதி காணப்பட்டதுடன் அந்த பணத்தை மாற்று முதலீட்டுக்களுக்காக பயன்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2.6 பொறலந்த விலங்குப் பண்ணையின் வணிக முற்பணக் கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக பேரேட்டுக் கணக்குகள் மற்றும் உபயோகப்பதிவேடுகள் பேணப்படாதிருந்தமையால் தயாரிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது நியாயமாக உறுப்படுத்தலைப் பெறமுடியாதிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறலந்த விலங்குப் பண்ணைக்குரிய நடைமுறைக் கணக்கில் ரூபா 2,787,730 மீதியும், சேமிப்புக் கணக்கில் ரூபா 8,545,234 தொகையான மீதியும் காணப்பட்டதுடன் அந்தப் பணத்தை மாற்று முதலீடுகளில் ஈடுபடுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2.7 விதை உருளைக் கிழங்கு இறக்குமதி செய்து பகிர்ந்தளிக்கும் விசேட முற்பணக் கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபை நிதி விதி 500 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த முற்பணக் கணக்கை பேணிச் செல்வது தொடர்பாக மாகாண சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2002 ஆம் ஆண்டின் போது ஊவா மாகாண விவசாய அமைச்சினால் பெரும் போக பயிர்ச் செய்கைக்காக விதை உருளைக்கிழங்கு இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்காக அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 67,000,000 முற்பணம் பிரதம செயலாளரிடமிருந்து கிடைத்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த முற்பணத் தொகையிலிருந்து ரூபா 40,869,196 தொகையொன்று மேலும் பிரதம செயலாளருக்கு தீர்க்கப்பட வேண்டியிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்திய உத்தியோகத்தர்களின் கவனமின்மை மற்றும் திட்டமிடலின்றி நடவடிக்கை எடுத்தமையின் காரணத்தால் மாகாண சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 29,800,461 ஆகும்.

(இ) கறுப்புப்புள்ளி நோய் பரவலினால் நிராகரிக்கப்பட்ட விதைக் கிழங்கிற்காக நெதர்லாந்தின் நிறுவனமொன்றிலிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 4,893,741 தொகை கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முற்பணக் கணக்கிற்குரிய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த கடன்பட்டோர் மீதி ரூபா 11,058,794 ஆகும். 2010 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படாதிருந்த 429 கடன்பட்டோர்களின் ரூபா 9,876,451 கூட்டுத்தொகையான கடன்மீதி அதில் உள்ளடங்கியிருந்தது.

## 6. செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 செயலாற்றல்

#### 6.1.1 அரசாங்க மானியம்

மாகாண சபை அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக கிடைத்த நிதிஏற்பாடு மற்றும் அவற்றைப் பயன்படுத்துதல் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| மூலம் | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| கல்வி | 1,243,564,765 | 1,126,036,618 | 117,528,147 | 09 |
| சுகாதாரம் | 565,446,753 | 536,354,888 | 29,091,865 | 05 |
| சமூகசேவை | 28,647,000 | 18,539,286 | 10,107,488 | 35 |
| மாகாண வீதி செயற்திட்டம் | 1,312,000,000 | 470,269,512 | 841,730,488 | 64 |
| ஏனையவை | 1,211,601,464 | 1,045,373,099 | 166,228,365 | 14 |
| மொத்தம் | 4,361,259,982 | 3,196,573,403 | 1,164,686,579 | |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் மாகாண வீதி செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதிஏற்பாட்டில் 64 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் சமூக சேவைக்கான தேறிய நிதிஏற்பாட்டில் 35 சதவீதம் ஏனையவற்றின் கீழ் 14 சதவீதம், கல்விக்கான 09 சதவீதம் மற்றும் சுகாதாரத்திற்காக 05 சதம் என நிதிஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 6.1.2 மாகாண அபிவிருத்தித் திட்டம்

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய வேலை மற்றும் தொடர்ச்சியான வேலைகளுக்காக ரூபா 1006 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதிக்குரிய 1192 செயற்திட்ட முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செயற்திட்ட வேலை முன்மொழிவுகளின் செயல்முன்னேற்றத்தை பின்வரும் அட்டவணை காண்பிக்கப்படுகின்றன.

| செயற்றிட்ட விபரம் | புதிய வேலை | தொடர்ச்சி யான வேலை | மொத்த வேலைத் திட்டங்கள் |
|---|---|---|---|
| முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட | 1043 | 106 | 1149 |
| 50% இற்கு மேல் பூர்த்தி செய்யப்பட்ட | 17 | - | 17 |
| 50% இற்கு குறைவாக பூர்த்தி செய்யப்பட்ட | 18 | - | 18 |
| ஆரம்பிக்கப்படாத | 08 | - | 08 |
| மொத்தம் | 1086 | 106 | 1192 |

### 6.1.3 பரீட்சைப் பெறுபேறுகள்

ஊவா மாகாண கல்வி திணைக்களத்தின் அடிப்படை நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அந்த திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 10,408,520,810 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் 06 செலவின விடயத்தின் கீழ் ரூபா 209,117,773 தொகை ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியில் பயன்படுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பரீட்சை பெறுபேறுகளை உயர்த்துவதற்காக தேவையான பாடம் சார்ந்த பெறுபேறுகள் மீளாய்வு செய்யப்படாதிருந்ததுடன் பெறுபேறுகளை உயர்த்துவதற்குத் தேவையான செயற்பாடுகள் இனங்காணப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. 2015 ஆம் ஆண்டின் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான சுருக்கமான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| பரீட்சை | தோற்றிய எண்ணிக்கை | சித்தியடைந்த எண்ணிக்கை | சித்தியடையாத மொத்த எண்ணிக்கை | சகல பாடங்களிலும் சித்தியடையாத எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் | 22373 | 18350 | 4023 | - |
| க.பொ.த (சா.தரம்)* | 18269 | 12057 | 6212 | 748 |
| க.பொ.த.(உ.தரம்)* | 13762 | 8731 | 5031 | 1083 |

- ❖ ஒட்டுமொத்த பெறுபேறுகளின் பிரகாரம் ஊவா மாகணத்தில் க.பொ.த(சா.தரம்) இற்காக 7 ஆவது இடத்தையும், க.பொ.த(உ.தரம்) விஞ்ஞானப் பிரிவில் 8 ஆவது இடத்தையும், பௌதீக விஞ்ஞானப் பிரிவில் 7 ஆவது இடத்தையும், வணிகப் பிரிவில் 9 ஆவது இடத்தையும், கலைப் பிரிவில் 1 ஆவது இடத்தையும் பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் 4 ஆவது இடத்தையும், உயிரியல் தொழில்நுட்ப பிரிவில் 4 ஆவது இடத்தையும் உரித்தாக்கிக் கொண்டிருந்ததுடன் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசிலுக்காக 6 ஆவது இடத்தையும் உரித்தாக்கிக் கொண்டிருந்தது.

- ❖ பசறை கல்வி வலயத்தில் 04 பாடசாலைகளில் 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கா.பொ.த(சாதாரண தரப்) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் எந்த ஒரு மாணவரும் சித்தியடையாதிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற கா.பொ.த(உ.த) பரீட்சைப் பெறுபேறுகளின் படி வலயத்தில் எந்த ஒரு பாடசாலையிலிருந்தும் ஒரு மாணவரேனும் பல்கலைக்கழகத்திற்கு பிரவேசிப்பதற்கான தகைமையை பெற்றிருக்கவில்லை.

- ❖ பசறை வலயக் கல்வி அலுவலகத்தினால் 2015 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட 30 நிகழ்ச்சித்திட்டங்கள் கல்விப் பொது.த(சாதாரண தரம்) பெறுபேறுகளை உயர்த்துவதற்கான 09 நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் க.பொ.த(உயர் தரம்) இலக்கிடப்பட்ட 02 நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன 2015 நவம்பர் 23 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- ❖ 5 ஆம் ஆண்டு புலமைப்பரீட்சையிலும் கல்விப் பொது(சா.த) பரீட்சையிலும் நாட்டின் மாவட்டங்களின் பிரகாரம் ஒட்டுமொத்த நிலை பின்வருமாறு இருந்தது.

| **பரீட்சை** | **ஒட்டுமொத்த பெறுபேறுகள் மாவட்ட அடிப்படையில் பெறப்பட்ட இடங்கள்** | |
|---|---|---|
| | **பதுளை மாவட்டம்** | **மொனறாகலை மாவட்டம்** |
| 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை | 22 | 23 |
| க.பொ.த(சா.தரம்) | 16 | 22 |

### 6.1.4 ஏனைய செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊவா மாகாண சபையின் செயல்நடைமுறை விதிக்கோவையின் 74 ஆவது விதியின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 07 செயற்குழுக்கள் vi ஆவது மாகாணசபை ஆரம்பிக்கப்பட்ட 2014 செப்தெம்பர் மாதம் முதல் 2016 மார்ச் மாதம் வரையான காலத்தில் செயற்படுநிலையில் காணப்படவில்லை. இதனால் 2015 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு செயற்குழுக்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பு கிடைத்திருக்கவில்லை. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | **செயற்குழுவின் பெயர்** | **உரிய காலத்தில் கூட்டம் கூட்டப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| I | மாகாண நிதியம் தொடர்பான கணக்குக் குழு | இல்லை |
| II. | உத்தேச நியதிச்சட்ட மற்றும் விதி தொடர்பான செயற்குழு | இல்லை |
| III | சபையின் வேலை நடவடிக்கைகள் தொடர்பான செயற்குழு | இல்லை |
| IV | அலுவலக நடைமுறை, விதி தொடர்பான செயற்குழு | இல்லை |
| V | பொது செயற்குழு | இல்லை |
| VI | பொது வசதிகள் மற்றும் வரப்பிரசாதங்கள் தொடர்பான செயற்குழு | 01 |
| VII | மக்கள் முறைப்பாட்டு செயற்குழு | 01 |

(ஆ) ஊவா மாகாண பிரதம அமைசர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும் சமாதானமும், கல்வி, உள்ளூராட்சி, காணி, காலாசாரம், சமூகநலனும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் நிர்மாண அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் பௌதீக செயற்முன்னேற்றத்தைக் காண்பிக்கின்ற செயல்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாணசபை நிதி விதி 6.2.5 இன் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றில் நோக்கங்கள் மற்றும் பணிகள் காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பிரதி பிரதம செயலாளர் (நிதி முகாமைத்துவம்) அலுவலகத்தினால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் பணிகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகத்திற்குரிய தரக் கட்டுப்பாட்டு ஆய்வுகூடத்தில் 14 வகையான தரப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் இயலுமை காணப்பட்டதுடன் வெளி நிறுவனமொன்றினால் பரிசோதனைக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமல் ஆய்வுகூட பொறியியலாளரின் பொறுப்பில் எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆய்வுகூட பொறியியலாளரின் விருப்பத்தின் பிரகாரம் பரிசோதனை விலைகள் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் தீர்மானிக்கப்பட்ட கூறுவிலைகள் ஊவா மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகூடத்திற்குரிய பௌதீக மற்றும் மனிதவளங்களைப் பயன்படுத்தி ஊவா மாகாண சபைக்கு கூடுதலான வருமானமொன்றை உழைத்துக் கொள்ளக்கூடிய வகையில் முறையான செயல்நடைமுறையொன்றை திட்டமிடுவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை.

(உ) பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலையில் விஷேட மற்றும் ஊனமுற்ற பிள்ளைகளுக்கான சிகிச்சைக்காக விஷேட வைத்தியரொருவர் இன்மையினால் உரிய பிரிவிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஊ) மாகாண நிதி விதி 133.5.17 இன் பிரகாரம் புதிய தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தும் உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் பதவியணியினருக்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஊவா மாகாண காணி ஆணையாளர் திணைக்களம், சிறுதோட்ட முயற்சிகள் அபிவிருத்தி மன்றம் மற்றும் பிபில பிரதேச செயலகத்துடன், பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் 03 பிரிவுகளில் 261 இறப்பர் பயிர்ச் செய்கையாளர்களுக்கு 520 ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. 2015 ஒக்தோபர் 23 ஆந் திகதி வரையிலும் பயிர் செய்கையாளர்களுக்கிடையே 14 பேர் மாத்திரம் இறப்பர் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் இறப்பர் பயிர்ச் செய்கை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் வெற்றியளிக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) புத்தள பிரதேச செயலகத்தினால் பிரமாண அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டத்தின் கிழ் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி வெளிப்படுத்தப்படாத 48 பிளாஸ்டிக் கதிரைகள் மற்றும் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 444,229 பெறுமதியான 219 பொருள் அலகுகள் 2015 திசெம்பர் 04 ஆந் திகதி வரையிலும் உரிய நலனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

## 6.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தீர்வு வழங்கப்பட்டதன் பின்னர் கடன்பட்டோர் நிலுவை கடன்தொகை செலுத்தாதிருந்த 30 நாட்களை விஞ்சியதன் பின்னர் உரிய கூட்டுறவு சங்கத்தின் மூலம் நீதிமன்றத்திற்கு சாட்டுவதற்காக விண்ணப்பிக்கும் படிவம் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் உரிய உத்தியோகத்தர்கள் அதற்கான தொடர் நடவடிக்கை எடுக்காதிருந்த அறவிட வேண்டியிருந்த கடன்களின் கூட்டுத்தொகை ரூபா 8,183,955 ஆக இருந்தது. இது தொடர்பாக ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் 2012

சனவரி 02 ஆந் திகதிய 2012/01 ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வ/ப உடபலாத்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 2014 ஆம் அண்டின் இறுதிக் கணக்கில் குறிப்பிடப்பட்ட 1972 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,308,681 தொகையான செயற்பாடற்ற 96 கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெலிமடை வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய உத்தியோகத்தரொருவருக்கு 2012 பெப்ரவரி 15 ஆந் திகதி முதல் ஊவா மாகாண கல்வித் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டிருந்த போதிலும், அத்திகதி முதல் 2015 திசெம்பர் மாதம் வரை ரூபா 2,174,708 தொகையான சம்பளம் மற்றும் படிகள் வெலிமடை வலயக்கல்வி அலுவலகத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2001 மார்ச் 28 ஆந் திகதிய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரின் 01/2001 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண சபை உறுப்பினரொருவர் உறுப்பினர் பதவியை கைவிடும் சந்தர்ப்பத்தில் மாகாண சபைக்கு அறவிடவேண்டிய சகல கடன் பணமும் ஒரே தடவையில் முழுமையாக அறவிட வேண்டியிருந்தது. 2015 ஆம் அண்டின் போது பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட ஐந்து மாகாண சபை உறுப்பினர்களிடமிருந்தும் அறவிடவேண்டியிருந்த ரூபா 1,003,100 கூட்டுத்தொகையான கடன் ஊவா மாகாண சபை செயலகத்தினால் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரே தடவையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக மாகாண சபை உறுப்பினர் பதவிக்கு இடைப்பட்ட காலப்பகுதியின் போது நியமிக்கப்படுகின்ற உறுப்பினர் ஒருவருக்கு கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான உறுப்பினர் பதவி கிடைக்கின்ற திகதியிலிருந்து மாகாண சபையின் காலம் முடிவடைகின்ற தினம் வரையான காலத்திற்கும் மொத்தக் கடன் தொகைக்கும் இடையிலான விகிதக் கணிப்பீடே உரித்தாகின்றது. அதற்கு முரணாக ஊவா மாகாண சபை செயலகத்தினால் இரண்டு உறுப்பினர்களுக்காக ரூபா 100,000 கூட்டுத்தொகையான கடன் பணம் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(உ) மாகாண கல்வித் திணைக்களத்திலிருந்து வெளியே பணியிடமாற்றம் பெற்றுச்சென்ற 3352 உத்தியோகத்தர்களின் ரூபா 57,373,463 தொகையான கடன் மீதி மற்றும் பணியிடமாற்றம் பெற்று வருகைதந்த 934 உத்தியோகத்தர்களின் ரூபா 24,779,547 தொகையான கடன் மீதி என்பன ஊவா மாகாண பிரதம செயலாளரின் 2004 சனவரி 08 ஆந் திகதிய 2004/01 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பிரதம அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும் சமாதனமும், கல்வி உள்ளூராட்சி, காணி, கலாசார, சமூக நலன் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் நிர்மாண அமைச்சிலிருந்து இடமாற்றலாகிச் சென்ற 33 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,361,554 கூட்டுத்தொகையான கடன் மீதியும் பணியிடமாற்றம் பெற்று வருகைதந்த 24 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 606,221 தொகையான கடன்மீதிகளும் ஊவா மாகாண பிரதம செயலாளரின் 2004 சனவரி 08 ஆந் திகதிய 2004/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) ஊவா மாகாண பிரதம செயலாளரின் 2004 சனவரி 08 ஆந் திகதிய 2004/01 ஆம் இலக்க சுற்றறிக்கை, தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் மற்றும் மாகாண நிதி விதி 485(4) இன் பிரகாரம் பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்) அலுவலகத்தின் 1995 ஆம் ஆண்டு முதல் வெளியே பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற 31 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,399,912 தொகையான கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. 1994 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை திணைக்களத்திற்கு வெளியே பணியிடமாற்றம் பெற்றுச்சென்ற 32

உத்தியோத்தர்களிடமிருந்து ரூபா 1,402,858 தொகையான கடன் மீதிகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தாபனப் பணிப்பாளர் நாயத்தின் 2011 யூன் 29 ஆந் திகதிய EST/T/TRAVEL/06/3030 ஆம் இலக்க கடிதத்திற்கு முரணாக மொனராகலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பதில் கடமை புரியும் கணக்காளருக்கு 2015 சனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதிக்குரியதாக ரூபா 32,500 இணைந்த படி செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2010 திசெம்பர் 16 ஆந் திகதிய 13/2010 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவு மற்றும் 2013 செப்தெம்பர் 20 ஆந் திகதிய 03/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பிரிவின் பிரகாரம் மரணமடைந்தவர்களின் விதவைகள் அனாதைகள் உரித்துள்ள பிள்ளைகளில் 26 வருடங்களைப் பூர்த்தி செய்ததன் பின்னர் கொடுப்பனவு நிறுத்தப்பட வேுண்டியிருந்தது. தங்கியிருப்போர்களாக பெயர் குறிப்பிடப்பட்ட ஒரு தங்கியிருப்பாளரின் வயது 2013 ஆகஸ்ட் 19 ஆந் திகதியில் உள்ளவாறு 26 வயதினைப் பூர்த்தி செய்திருந்தும் அத்திகதி முதல் 2015 நவம்பர் வரை ரூபா 355,841 தொகையொன்று தங்கியிருப்போர் படியாக மொனராகலை வலயக் கல்வி அலுவலகத்தினால் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஒ) கமநல செயற்குழு கட்டிடங்களில் விவசாய ஆலோசகர் அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 218,784 தொகையான வாடகை மொனராகலை விவசாயப் பணிப்பாளரினால் தீர்க்கப்பட்டிருந்தது.

(ஓ) 2004 சனவரி 08 ஆந் திகதிய 2014/1 ஆம் இலக்க ஊவா மாகாண பிரதம செயலகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண சபையின் ஒவ்வொரு அமைச்சுக்கள், திணைக்களங்களிலிருந்து பணியிடமாற்றம் பெற்று வருகை தந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் மற்றும் பணியிடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன்மீதிகள் கணக்குப் பொழிப்பின் மூலம் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 531,149 தொகையான செயற்பாடற்ற 04 கடன் மீதிகள் மற்றும் ரூபா 1,246,499 பெறுமதியான 24 கடன்பட்டோர் மீதிகள் என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மாகாண சபையிலிருந்து ஏனைய மாகாண சபைகளுக்கும் மத்திய அரசாங்கத்தின் நிறுவனங்களுக்கும் பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் பணியிடமாற்றம் பெற்று வருகை தந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் ஒரே தடவையில் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 26,303,832 பெறுமதியான 838 கடன்கொடுத்தோர் மீதிகளும் ரூபா 52,695,291 பெறுமதியான 1049 கடன்பட்டோர் மீதிகளும் அதன் பிரகாரம் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை.

(ஔ) ஒக்கம்பிட்டிய விதை பண்ணையால் 2014 ஆம் ஆண்டிற்காக உழைக்கப்பட்ட ரூபா 15,188,767 தொகையான இலாபம் 2015 ஆம் ஆண்டின் போது ஊவா மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட ஊவா மாகாணத்தின் தச்சுவேலை பயிற்சி நிலையங்களில் 2015 ஆம் ஆண்டின் போது 48 பயிலுனர்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் 19 பயிலுனர்கள் மாத்திரமே பயிற்சியினைப் பூர்த்தி செய்திருந்தனர்.

(ஆ) வெலிமடை கல்வி வலயத்தின் பாடசாலைகளில் 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை மின்சாரப்பட்டியல் மீதி ரூபா 833,437 ஆக இருந்தடன் 16 பாடசாலைகளின் மின்சாரம் அசாதாரணமாக பயன்படுத்தியமை தொடர்பாக பின் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை அரசாங்க சேவை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு சம்பளப் பத்திரத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்த ரூபா 6,893,458 தொகை மற்றும் 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஓய்வுபெற்றுச் சென்றிருந்த உத்தியோகத்தர்களின் பணிக்கொடைகளிலிருந்து கழிக்கப்பட்ட ரூபா 2,580,918 தொகை என ரூபா 9,474,376 கூட்டுத்தொகையினை பதுளை வலயக் கல்வி அலுவலகத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) பதுளை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய கல்வி அபிவிருத்தி நிலையத்தின் கட்டிடம் 2000 மார்ச் 16 ஆந் திகதி முதல் வெளித்தரப்பினர்களினால் ஒரு மாணவரிடமிருந்து ரூபா 850 படி அறவிட்டு 64 மாணவர்களையுடைய முன்பள்ளிப் பாடசாலையொன்று நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுக்காது அரசின் வளங்கள் முறையற்ற பயன்படுத்தலுக்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(உ) விஷேட அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் ஊவா மாகாண நிதி, திட்டமிடல் அமைச்சினால் 2014 யூன் மாதத்தின் போது நலனாளிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக பிபில பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் 304 உபகரண விடயங்கள் மீண்டும் 2014 யூலை 18 ஆந் திகதி மாகாண சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. மாகாண நிதி, திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் 2014 மே 29 ஆந் திகதிய கடிததத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் 2014 யூன் மாதத்திற்கு முன்னர் பகிர்ந்தளிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2015 ஒக்தோபர் 19 ஆந் திகதி வரையிலும் 1188 உபகரணங்கள் களஞ்சியத்தில் நிறுத்தி வைக்க்பபட்டிருந்தன.

(ஊ) அரச மற்றும் தனியார் கட்டளைகளுக்காக பொருட்களை உற்பத்திசெய்தல், இரும்புப் பொருட்கள் மற்றும் கதவு யன்னல்களை அமைத்தல், தொடர்பாக பயிலுனர்களுக்கு பயிற்சியொன்றை வழங்கும் இலகு பொறியியல் பயிற்சி நிறுவகம் ஆரம்பித்தல் அடிப்படை நோக்கமாக இருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டிற்காக பெறகல இலகு பொறியியல் நிறுவகத்திற்கு பயிற்சிக்காக இரண்டு பயிலுனர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்ததுடன் மெதகம பொறியியல் நிறுவனத்திற்கு பயிலுனர்கள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்திற்குரிய களஞ்சியம் தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது 09 விடயங்களுக்குரிய ரூபா 228,525 பெறுமதியான களஞ்சியப் பொருட்களில் மிகையொன்று வெளிப்படுத்தப்பட்டது.

(ஏ) நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தால் 2015 யூலை 22 ஆந் திகதி ரூபா 46,360 பெறுமதியான 08 பிளாஸ்டிக் மேசைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தாக களஞ்சிய இருப்புப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பௌதீக பரிசோதனையின் போது ரூபா 28,975 பெறுமதியான 05 மேசைகள் குறைவாக வழங்கப்பட்டிருந்தன.

## 6.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

2015 நவம்பர் 06 ஆந் திகதி படல்கும்புற பிரதேச வைத்தியசாலையில் மருந்துக் களஞ்சிய பரீட்சிப்பின் போது 13 வகையான மருந்துகளுக்குரிய 75,132 அலகுகளில் பற்றாக்குறையும், 7010 அலகுகளில் மிகையும் காணப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டின் மே முதல் நவம்பர் வரையேயான காலப்பகுதியின் போது களஞ்சியத்திற்குக் கிடைத்த 03 வகை மருந்து இருப்பு

வகைகளுக்குரிய 36,000 அலகுகள் காலாவதியாவதற்கு அண்மித்ததாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 6.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக கமநல அபிவிருத்தி திணைக்களத்திலிருந்து வழங்கப்பட்ட வேலைகளின் நிர்வாகச் செலவினங்களில் ரூபா 151,500 தொகை ஊவா மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தால் வெளிநாட்டு சுற்றுலா செலவினத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2011 யூலை 06 ஆந் திகதிய FC/PSDG & CBG/Circular/2011/1 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியத்தின் கீழ் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக பொதுத் திறைசேரியினதும் நிதி ஆணைக்குழுவினதும் முன் அங்கீகாரமின்றி ஊவா மாகாண பிரதம அமைச்சு, நிதி, திட்டமிடல், சட்டமும் சமாதனமும், கல்வி, மாகாண நிர்வாகம், காணி, கலாசாரம், சமூக நலன்புரியும் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி மற்றும் நிர்மாண அமைச்சினால் ரூபா 9,400,000 செலவில் BMW வகையின் மோட்டார் வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த வாகனக் கொள்வனவிற்கும் தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட மாதிரிக்கும் இடையே 07 வேறுபாடுகள் மாகாண இயந்திர பணிப்பாளரினால் அறிக்கையிடப்பட்டிருந்தது.

(இ) ப/வெலிமடை விஜய வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்கிலிருந்து வேலை, வழங்கல் மற்றும் சேவைகளை நிறைவேற்றும் போது 06 சந்தர்ப்பங்களில் ரூபா 184,286 தொகை செலவில் கூறுவிலை கோரப்படாமலும் 09 சந்தர்ப்பங்களின் போது ரூபா 561,445 தொகை அங்கீகரிக்கப்படாமலும் செலவினங்கள் உறுதிப்படுத்தப்படாமலும் ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா 170,600 தொகை செலவில் முறையான தொழில்நுட்ப மதிப்பீட்டின்றியும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2011 மே 11 ஆந் திகதிய பீஎல்/6/11/3டு1 ஆம் இலக்க உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் மாகாண சபை தலைவர், ஆளுங்கட்சியின் பிரதான அமைப்பாளர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்கட்சியின் பிரதான அமைப்பாளர் போன்ற அங்கீகரிக்கப்படாத பதவியிலுள்ளவர்களின் சம்பளம், படிகள் மற்றும் வசதிகள் தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகளை செய்யாதிருக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த ஆலோசனைகள் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவிற்கு முரணாக அங்கீகரிக்கப்படாத மூன்று பதவிகளுக்காக 2014 செப்தெம்பர் மாதம் முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 6,992,258 தொகை சபை செயலகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

### 6.6 வெளிப்படையான மோசடிகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ப/பதுளுதென வித்தியாரயத்தின் குணநல ஈடுபடுத்தல் கணக்கில் ரூபா 337,173 தொகை அதிபரினால் தனிப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) கதிர்காமம் பிரதேச வைத்தியசாலையில் 2015 சனவரி மாதம் முதல் ஒக்தோபர் மாதம் வரை அழுக்குத் துணிகளை கழுவுவதற்காக கொடுப்பனவு செய்யும் போது ரூபா 133,325 தொகை ஒப்பந்தக்காரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**6.7 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

---

பின்வரம் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மஹியங்கன கல்வி வலயத்தில் பாடசாலைகளின் குணநல உள்ளீட்டு பணமான ரூபா 25,468,762 உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்படாது வலயக் கல்வி அலுவலகத்தின் பொது வைப்புக் கணக்கில் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தில் பாடசாலைகளின் குணநல உள்ளீட்டு பணத்தின் சேமிப்பு ரூபா 6,787,379 தொகை பதுளை வலயக் கல்வி அலுவலகத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் அலுவலகத்தின் கட்டுநிதி செயற்பாடுகளுக்காகச் செலவிடப்பட்டிருந்தது.

(இ) பெற்றோர்களின் பாதுகாப்பை இழந்த பிள்ளைகளின் கல்வி மட்டத்தை உயர்த்தும் நோக்கில் ஊவா மாகாண கல்வி அமைச்சு அமுல்படுத்திய சிசு ரகும் மாணவர் நிதிஉதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பண்டாரவளை வலயக் கல்வி அலுவலகத்தால் 2012 முதல் 2015 ஆம் ஆண்டு வரை மாணவர் நிதிஉதவி செலுத்துவதற்காக வங்கிக்கு அனுப்பப்பட்ட பணத்தில் ரூபா 100,500 பிழையான கணக்கு இலக்கம் குறிப்பிடப்பட்டதன் அடிப்படையில் மீள அனுப்பப்பட்டிருந்தது. அந்த மாணவர் உதவிப்பணம் தீர்க்கப்படாது 2015 திசெம்பர் 08 ஆந் திகதி வரை பண்டாரவளை வலயக் கல்வி அலுவலகத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2015 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் ப/றத்கரவ்வ மகா வித்தியாயலத்தின் குணநல உள்ளீட்டு வெலிமடை வலயக் கல்வி அலுவலகத்திலிருந்து கிடைத்த தொகையில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 310,686 ஆன மீதியொன்று காணப்பட்டது.

(உ) ஊவா மாகாண கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கான வருடாந்த நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட ரூபா 26,000,000 தொகையான நிதி ஏற்பாட்டில் கூட்டுமொத்தமாக ரூபா 1,255,175 நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்குப் புறம்பாக பிரதம அமைச்சர், நிதி, திட்டமிடல், சட்டம் சமாதானம், கல்வி, உள்ளூராட்சி, காணி, கலாசார, சமூக நலன், கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியும் மற்றும் நிர்மாண அமைச்சினால் உபசரிப்பு நடவடிக்கைகள் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) விசேட கிராமிய சுற்றுலா மற்றும் மிகவும் வறுமையான குடும்பங்களை மேலோங்கச் செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 15,000,000 தொகையான நிதிஏற்பாட்டில் ரூபா 2,421,163 தொகை நோக்கத்திற்கு புறம்பாக பிரதம அமைச்சு, நிதி, திட்டமிடல், சட்டம் சமாதானம், கல்வி, உள்ளூராட்சி, காணி, கலாசார சமூக நலன் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிர்மாண அமைச்சினால் உபசரிப்பு மற்றும் விழா நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்டிருந்தது.

(எ) 2015 இன் வருடாந்த நிதிக்கூற்றுக்களில் பின்னடைவான மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்கான செலவின விடய இலக்கம் 704-3-7-2502(12) இன் கீழ் ரூபா 68,000,000 மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 92,766,142 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பிரதம அமைச்சு, நிதி, திட்டமிடல், சட்டம், சமாதனம், கல்வி, உள்ளூராட்சி, காணி, கலாசார சமூக நலனும் கிராமிய உட்கட்டமைப்பு

வசதிகள் அபிவிருத்தி நிர்மாண அமைச்சினால் செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு முரணாக பாடசாலைகளில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 9,347,729 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 6.8 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மொ/கெந்தவின்ன மகா வித்தியாலயத்தின் கற்கை நிலையத்திற்காக ரூபா 364,506 தொகை செலவிடப்பட்டு 2009 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்த கணனி உபபாகங்கள் அந்த நிலையத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தமையினால் 2015 நவம்பர் 25 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மொனராகலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான 06 வாகனங்கள் 2012 ஆம் ஆண்டு முதல் பழுதுபார்க்கப்படாமல் செயற்பாடற்று பல்வேறு இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) மொனராகலை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 03 உத்தியோகபூர்வ இல்லங்கள் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையின் காரணமாக பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

(ஈ) பண்டாரவளை கல்வி வலயத்திற்குரிய 35 பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் விடுதிகள் குடியிருப்பிற்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(உ) வெலிமடை கல்வி வலயத்திற்குரிய பாடசாலைகளில் 42 ஆசிரியர் விடுதிகள் குடியிருப்பிற்காக அன்றி ஏனைய கல்விப் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 06 ஆசிரியர் விடுதிகள் குடியிருப்பிற்காக பயன்படுத்தப்படாமல் மூடிவைக்கப்பட்டிருந்தது. 09 ஆசிரியர் வீடுகள் குடியிருப்பிற்காக பொருத்தமற்ற பழுதடைந்த நிலையில் காணப்பட்டன.

## 6.9 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பண்டாரவளை வலயக் கல்வி அலுவலகத்தினால் பாடசாலை கல்விசாரா பதவியணிக்குரிய 04 ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட்டு நிலுவை சம்பளம் செலுத்தும் போது கூட்டுமொத்தமாக ரூபா 288,439 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் வெளிநாட்டு பயிற்சி பாடநெறியொன்றின் பாடநெறிக் கட்டணமாக 88,200 அமெரிக்க டொலர்களுக்குச் சமமான தொகையொன்று பிரதி பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) அலுவலகத்தினால் தாய்லாந்தில் ஆசிய தொழில்நுட்ப நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் 22,400 அமெரிக்க டொலர் பெறுமதியான பாடநெறிகளுகளில் மாத்திரம் உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர். அதன் பிரகாரம் 65,800 அமெரிக்க டொலர்களுக்கு சமமான ரூபா 8,685,000 தொகையொன்று தாய்லாந்தில் ஆசிய தொழில்நுட்ப நிறுவனத்திற்கு மேலதிமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பிரதம அமைச்சரின் பிரத்தியோக பதவியணியில் தற்காலிக சாரதியின் தனிப்பட்ட நடவடிக்கைகளுக்காக கெப் வண்டி பிரயாணம் செய்த போது 2015 மே 15 ஆந் திகதி விபத்திற்குட்பட்டமையினால் ஏற்பட்ட ரூபா 1,953,001 மதிப்பீடு செய்யப்பட்ட நட்டம் தொடர்பாக ஊவா மாகாண நிதி விதி 103.6 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபத்து தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு 2015 திசெம்பர் 07 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், பொலிஸ் முறைப்பாட்டுப் பிரதி,

களப்பரிசோதனை அறிக்கை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்குரிய கோவை என்பன கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மொனராகலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை ஏற்பட்ட ரூபா 1,828,647 தொகையான 05 வாகன விபத்துக்கள் தொடர்பாக மாகாண சபை நிதி விதி 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.10 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) எட்டம்பிட்டிய நீர் உத்தேசத்திட்டம்

தனிமைப்படுத்தப்பட்ட கிராம அபிவிருத்தி விஷேட செயற்திட்டத்தின் கீழ் எட்டம்பிட்டிய நீர் முன்மொழிவுத் திட்டத்திற்காக ஹாலிஎல பிரதேச சபையினால் ரூபா 1,820,575 தொகைக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் தாங்கிக்கு நீரைக் கொண்டு செல்லும் 1''அளவான நீர்க்குழாய் Type 1000 அளவில் இருக்க வேண்டிய போதிலும், 100 மீற்றர் அளவு Type 600 அளவில் பொருத்தப்பட்டிருந்ததுடன் 26.5 மீற்றர் அளவான நீர்க்குழாய் நிலத்திற்குக் கீழ் பதிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) தொடம்கொல்ல நீர் உத்தேசத்திட்டம்

தனிமைப்படுத்தப்பட்ட கிராம அபிவிருத்தி விஷேட செயற்திட்டத்தின் கீழ் தொடம்கொல்ல நீர் முன்மொழிவுத்திட்டத்திற்காக எல்ல பிரதேச சபையினால் ரூபா 1,997,887 தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2015 பெப்ரவரி 06 இற்கு முன்னர் செயற்திட்டத்தின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2015 ஒக்தோபர் 08 ஆந் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் செயற்திட்டம் தொடர்பாக சாத்தியவள அறிக்கையும் பெறப்பட்டிருக்கவில்லை.

### (இ) மொ/ அமுணகந்துற மகா வித்தியாலயத்தின் விவசாய செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணம்

மொ/ அமுணகந்துற மகா வித்தியாலயத்தில் விவசாய செயற்பாட்டுக் கூட்டத்தை நிர்மாணிப்பதற்காக பிரதி பிரதம செயலாளரினால் (பொறியியல் சேவை) ரூபா 2,374,049 தொகையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2016 பெப்ரவரி 16 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

i. யன்னல் பொருத்துவதற்காக ரூபா 126,651 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், யன்னல் நிலைக்கும் சுவருக்கும் இடையே பல்வேறு இடங்களில் 06 மில்லிமீற்றர் அளவில் இடைவெளி காணப்பட்டது.

ii. கதவுகளைப் பொருத்துவதற்காக ரூபா 110,055 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், கதவு நிலைக்கும் சுவருக்குமிடையே பல்வேறு இடங்களில் 06-08 மில்லி மீற்றர் அளவிலான இடைவெளி காணப்பட்டது.

iii. வழங்கப்பட்டிருந்த உபகரணங்களின் தயாரிப்பு தொடர்பாக மாதிரி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

iv. தரைப்பாங்கானநிலத்தில் 10 அடி அளவிலான ஆழத்திற்கு மண்வெட்டி அகற்றப்பட்டு நிலம் மட்டப்படுத்தப்பட்டு கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு மனை வெட்டப்பட்டமையால் வளைவுடன் கூடிய பகுதியொன்று மண்சரிவிற்கு உட்பட்டிருந்தது.

**(ஈ) ப/ஒறுபெந்திவெவ மகாவித்தியாயலயத்தின் கலைப் பிரிவினை பழுதுபார்த்தல்**

ப/ ஒலுபெந்திவெவ மகா வித்தியாயலயத்தின் கலைப் பிரிவினை பழுதுபார்ப்பதற்காக பிரதி பிரதம செயலாளரினால் (பொறியியல் சேவை) 2015 யூன் 10 ஆந் திகதி ரூபா 1,226,229 தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் கதவுகளை வழங்கி பொருத்துதல், நிறப் பூச்சுக்களுக்காக ரூபா 115,600 தொகையும் யன்னல் பொருத்துதல் மற்றும் நிறப்பூச்சுக்களுக்காக ரூபா 19,394 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. கதவுகள் மற்றும் யன்னல்களின் பூர்த்தி திருப்திகரமான நிலையில் காணப்படாமை மற்றும் எனாமல் நிறப்பூச்சுக்களுக்குப் பதிலாக வானிஸ் பூசப்பட்டிருந்தமை 2016 பெப்ரவரி 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசொதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**(உ) மொ/மதுாறுகெட்டிய ஆரம்பப் பாடசாலையின் ஆய்வு கூடத்தை நிர்மாணித்தல்**

மொ/மதுாறுகெட்டிய ஆரம்பப் பாடசாலையின் ஆய்வுகூடத்தை நிர்மாணிப்பதற்காக பிரதி பிரதம செயலாளரினால் (பொறியியலாளர் சேவை) 2015 மே 25 ஆந் திகதி ரூபா 2,366,511 தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2015 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையிலும் நிர்மாணத்தின் சகல வேலைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 பெப்ரவரி 16 ஆந் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. தாமதக் காலத்திற்காக உடன்படிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய ரூபா 1,401,906 தொகையான தாமதக் கட்டணங்கள் ஒப்பந்தக்காரரிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) ப/மறங்கஹவெல வித்தியாலத்தின் பாடசாலைக் கட்டிட நிர்மாணம்**

ப/மறங்கஹவெல வித்தியாலயத்தின் பாடசாலைக் கட்டிட நிர்மாணத்திற்காக பிரதி பிரதம செயலாளரினால் (பொறியியல் சேவை) 2015 மே 15 ஆந் திகதி ரூபா 3,027,248 தொகையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2016 பெப்ரவரி 17 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

i. 2015 ஆகஸ்ட் 05 ஆந் திகதியளவில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், பரீட்சிப்புச் சந்தர்ப்பம் வரையிலும் சில வேலைப்பகுதிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

ii. நிர்மாணங்களுக்காக வழங்கப்பட்ட மணல் குறித்த நியமத்தில் காணப்படவில்லை.

iii. வேலைத்தலத்திற்காக பாடசாலையிலிருந்து அனுமதியற்ற தற்காலிக மின்சார வழங்கலொன்று பெறப்பட்டிருந்தது.

iv. கட்டிடத்தின் பின்பக்கத்தில் மனை வெட்டி மட்டப்படுத்தப்பட்டிருக்கவில்லை. வெட்டி அகற்றப்பட்ட மண் கட்டிடத்தின் முன்பக்கத்தில் போடப்பட்டமையினால் கழுவிச் செல்வதற்கு உட்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தின் போது கட்டிடத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

V. பொருத்தப்பட்டுள்ள 10 மின்சார விசிறிகளுக்காக நிலத்துடன் இணைக்கும் வயல் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

**(எ) ப/உதயராஜ மகா வித்தியாலயத்தின் கணனி ஆய்வுகூடக் கட்டிட நிர்மாணம்**

ப/உதயராஜ மகா வித்தியாலயத்தின் கணனி ஆய்வுகூட கட்டிட நிர்மாணத்திற்காக பிரதி பிரதம செயலாளரினால் (பொறியியல் சேவை) 2015 மே 06 ஆந் திகதி ரூபா 2,263,140 தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2016 பெப்ரவரி 18 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

i. நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் கூரைக்கு அடுத்தாலுள்ள கட்டிடத்தின் கூரையுடன் ஒன்றுக்கொன்று அருகில் இருந்தமையால் 12 மீற்றர் நீளத்தில் வலுவான மரத்தினால் தயாரிக்கப்பட்ட மழைநீர் பீலி பொருத்துவதற்காக மேலதிக வேலையின் கீழ் ரூபா 93,000 செலுத்தப்பட்டிருந்தது. மதிப்பீடு தயாரிக்கும் போதும் நிர்மாணிக்கும் போதும் உத்தேச நிலம் உரியவாறு இனங்காணப்படாமையினால் இந்த வகையில் மேலதிக செலவினமொன்றைச் செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.

ii. பொருத்தப்பட்ட யன்னல் நிலைக்கும் சுவரூக்குமிடையே பல்வேறு இடங்களில் 05 மில்லிமீற்றர் அளவிலான இடைவெளி காணப்பட்டது.

**6.11 பதவியணியினர் நிர்வாகம்**

**6.11.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) மாகாண சபை, அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள்**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 1304 | 893 | 411 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 3257 | 2714 | 543 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 21751 | 21220 | 531 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 5959 | 706 | - | 1108 |
| (v) | ஏனையோர் (அமைய தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 1237 | - | 1237 |
| | மொத்தம் | 32271 | 33131 | 1485 | 2345 |

இது தொடர்பாக பின்வரம் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் சிரேஷ்ட நிலையில் 411 பதவிகளும், மூன்றாம் நிலையில் 543 பதவிகளும் மற்றும் இரண்டாம் நிலையில் 531 பதவிகளும் ஆக 1485 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் ஆரம்ப நிலையில் 1108 ஊழியர்களும் 1237 மேலதிகமாக அமைய ஊழியர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்த ஆட்சேர்ப்பிற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாடசாலை பதவியணியினர்**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|---|
| (i) | அதிபர்கள் | 1011 | 601 | 410 | - |
| (ii) | ஆசிரியர்கள் | 16334 | 17947 | - | 1613 |
| (iii) | உதவிப் பதவியணியினர் | 622 | 1382 | - | 760 |
| | மொத்தம் | 17967 | 19930 | 410 | 2373 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் அதிபர் பதவிகளில் 410 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் ஆசிரியர் சேவையில் 1613 உம் உதவி பதவியணியில் 260 உமாக 2373 பேர் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்கு முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**6.11.2 கல்வி மற்றும் தொடர்புடைய பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதுளை கல்வி வலயத்தில் 07 பாடசாலைகளில் எந்தப் பாடவேளைகளும் மேவுகை செய்யாத 31 ஆசிரியர்களும் வேறு பாடசாலைகளுக்கு இணைக்கப்பட்ட 08 ஆசிரியர்களும் ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் கடமைகளுக்காக நியமிக்கப்பட்ட 08 ஆசிரியர்களும் சேவையாற்றிக் கொண்டிருந்தனர்.

(ஆ) ப/லுணுகல மத்திய மகா வித்தியாலத்தின் சம்பளப் பட்டியலில் சம்பளம் பெறுகின்ற மூன்று ஆசிரியர்கள் வேறு பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

(இ) மஹியங்கன கல்வி வலயத்திற்குரிய 40 பாடசாலைகளில் பதிற் கடமை அதிபர்களாக இலங்கை ஆசிரியர் சேவையின் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை அதிபர் சேவையின் 08 உத்தியோகத்தர்கள் வேறு பாடசாலைகளில் பாடங்களின் மேவுகை நடவடிக்கைகளில் இணைக்கப்பட்டிருந்தனர்.

(ஈ) பாடசாலை சிற்றூழியர் மற்றும் 04 பாடசாலை தொழிலாளர்கள் உரிய பாடசாலைகளில் சேவையில் ஈடுபடுத்தப்படாமல் மஹியங்கன வலய அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்தனர்.

(உ) மஹியங்கன கல்வி வலயத்தில் 09 பாடசாலைகளின் சம்பளப்பட்டியலில் சம்பளம் பெறுகின்ற இலங்கை ஆசிரியர் வேலையின் 09 ஆசிரியர்கள் வேறு பாடசாலைகளுக்கும் தேசிய பாடசாலைகளுக்கும் இணைக்கப்பட்டிருந்தனர்.

(ஊ) பதுளை கல்வி வலயத்தில் ஏனைய பாடசாலைகளிலிருந்து ஏனைய கல்வி வலயத்திற்குரிய பாடசாலைகளின் சம்பளப்பட்டியலில் சம்பளம் பெறுகின்ற 21 ஆசிரியர்கள் பதுளை கல்வி வலயத்தின் 12 நரகப்பகுதி பாடசாலைகளில் இணைக்கப்பட்டிருந்தனர். அதில் 14 பேர்களுக்கு எந்தப் பாடவேளையும் மேவுகை செய்யப்படாதிருந்ததுடன் இரண்டு ஆசிரியர்கள் தேசிய பாடசாலைகளுக்கு இணைக்கப்பட்டிருந்தனர்.

(எ) எல்ல பிரிவிற்குரிய 04 பாடசாலைகள் 2015 ஆம் ஆண்டின்போது மேற்பார்வை செய்யப்படாதிருந்ததுடன் 22 பாடசாலைகள் ஆகக் குறைந்தது பாடசாலைத் தவணையில் ஒரு தடவை வீதம் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ப/றத்கரவ்வ மகா வித்தியாலத்தில் ஏனைய பாடசாலைகளில் சம்பளம் பெறுகின்ற மூன்று ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வித்தியாலயத்தில் சம்பளப் பதிவேட்டில் சம்பளம் பெறும் இரண்டு ஆசிரியர்கள் வேறு பாடசாலைகளில் இணைக்கப்பட்டிருந்தனர்.

(ஐ) ப/போகஹகும்புற மகா வித்தியாலயத்தில் சம்பளம் பெறுகின்ற பதவியணியினருக்குரிய மூன்று ஆசிரியர்களில் முறையே வெலிமடை வலயக் கல்வி அலுவலகத்திற்கும், வங்கியகும்புற தேசிய பாடசாலைக்கும் ஊவா மாகாண சபையின் உறுப்பினரொருவரின் பதவியணிக்கும் நியமிக்கப்பட்டிருந்ததுடன் வேறு பாடசாலைகளிலிருந்து சம்பளம் பெறுகின்ற மூன்று ஆசிரியர்கள் ப/போகஹகும்புற மகா வித்தியாலயத்திற்கு இணைக்கப்பட்டு போதியளவான பாடவேளைகளை மேவுகை செய்யும் வகையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கல்வி அமைச்சுச் செயலாளரின் 2003 நவம்பர் 07 ஆந் திகதிய 2003/38 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஆசிரியரொருவர் 40 நிமிட பாடவேளைகள் 35 கற்பிக்க வேண்டியிருந்த போதிலும் ப/வெலிமடை விஜய வித்தியாலயத்தின் 10 ஆசிரியர்களுக்கு 04-19 வரையான பாடவேளை மேவுகை செய்யப்பட்டும் இரண்டு ஆசிரியர்கள் எவ்வித பாடவேளையையும் மேவுகை செய்யாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஓ) ப/வெலிமடை விஜய வித்தியாலயத்தில் சம்பளம் பெறுகின்ற பதவியணியினருக்குரிய இரண்டு ஆசிரியர்கள் வேறு பாடசாலைகளுக்கு இணைக்கப்பட்டிருந்ததுடன் வேறு பாடசாலைகளிலிருந்து சம்பளம் பெறுகின்ற மூன்று ஆசிரியர்கள் ப/வெலிமடை விஜய வித்தியாலயத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஔ) பசறை கல்வி வலயத்தில் 33 பாடசாலைகளில் அதிபர் பதவிக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் ஆசிரியர்கள் பதிற் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(க) மொனராகலை கல்வி வலயத்தில் 10 மாகாண சபை பாடசாலைகளில் அதிபர் தரத்தின் 11 ஆசிரியர்களுக்கு ஆசிரியர் சேவையின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கும் போது 53 பாடசாலைகளில் அதிபர் பதவிக்காக ஆசிரியர் தரத்திலுள்ள ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(கா) மெதகம கல்வி வலயத்திற்குரிய பாடசாலைகளில் 42 ஆசிரியர்கள் நீண்டகாலமாக மிகையாக சேவையில் ஈடுபட்டிருக்கின்றமை வெளிப்படுத்தப்பட்டது.

**6.11.3 ஏனைய பதவியணியினர் நிர்வாகம்**

(அ) 07 மிருக வைத்தியர்களின் பற்றாக்குறையொன்று காணப்படும் போது விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளரின் 2015 யூலை 17 ஆந் திகதிய கடிதத்தின் ஆலோசனையின் பிரகாரம் மிருக வைத்திய உத்தியோகத்தருக்கு களஞ்சிய இருப்பு மற்றும் ஏனைய அலுவலகக் கடமைகளும் கையளிக்கப்பட்டிருந்தன.

(ஆ) ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் 2007 ஏப்ரல் 25 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் ஆரம்ப ஆசிரியர் பதவிக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவருக்கு 2007 யூன் 06 ஆந் திகதி முதல் 2015 நவம்பர் 05 ஆந் திகதி வரை ஊவா மாகாண கல்வி அமைச்சிற்கு நியமிக்கப்பட்டு முகாமைத்துவ உதவியாளர் சேவையின் கடமைகள் கையளிக்கப்பட்டு அந்தக் காலப்பகுதியில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2,038,011 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இலங்கை ஆசிரியர் சேவையின் உத்தியோகத்தரொருவருக்கு தொழில் விடய துறைகளில் வழங்கப்படுகின்ற ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்குபற்றுவதற்காக இந்த உத்தியோகத்தருக்கு கடமை விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் ''பயிற்சி உதவி ஆசிரியர் பதவிக்கு பதவியுயர்வும்'' வழங்கப்பட்டிருந்தது.

(இ) பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்) அலுவலகத்தில் மிகையான 10 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டில் யூலை முதல் திசெம்பர் வரை ரூபா 2,163,480 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்) அலுவலகத்தின் முன்னாள் பிரதி பிரதம செயலாளருக்கு 2014 ஒக்தோபர் 29 ஆந் திகதி முதல் விவசாயம், நீர்ப்பாசனம், விலங்கின உற்பத்தி, நன்னீர், மீன்பிடி கைத்தொழில், போக்குவரத்து மற்றும் சுற்றுலா அலுவல்கள் அமைச்சிற்கு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டிற்காக சம்பளமாக ரூபா 1,113,208 தொகை பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்) அலுவலகத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) உதவி விடுதிப் பொறுப்பாளர் பதவிக்காக ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளுக்கு முரணாக பிபில செவன சிறுவர் இல்லத்தின் உதவி விடுதிகாப்பாளர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் காப்பாளரை ஆட்சேர்த்து 2013 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் அவர் உதவி விடுதி காப்பாளர் (iii) தரத்தில் நியமிக்கப்பட்டு 2014 சனவரி முதல் 2015 யூலை மாதம் வரை சம்பளமாக ரூபா 403,138 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**6.12 வாகனப் பயன்பாடு**

(அ) சுகாதார, சுதேச மருத்துவ நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவை மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சுச் செயலாளரினால் 2014 செப்தெம்பர் முதல் 2015 யூலை வரை தமது உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக மாதத்திற்கு 170 லீற்றர் எரிபொருளுக்கான மாதாந்த எரிபொருள் படி பெறப்பட்டிருந்த போதிலும் உரிய எரிபொருளைப் பயன்படுத்தி உத்தியோகபூர்வ வாகனங்கள் ஓட்ட நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. 2006 யூலை 11 ஆந் திகதிய 11/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனமொன்று உரித்தான உத்தியோகத்தரொருவர் குழாம் வாகனத்தைப் பயன்படுத்த முடியாதிருந்த போதிலும், இந்த உத்தியோகத்தர் குழாம் வாகனத்தைப் பயன்படுத்தி அதற்காக ரூபா 344,856 பெறுமதியான 3384.25 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தியிருந்தார்.

(ஆ) 2014 சனவரி 01 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் சாதாரண பெற்றோல் மற்றும் டீசல் விலைகளின் அடிப்படையில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக எரிபொருள்படி வழங்க முடியுமான போதிலும், 2014 சனவரி 01 ஆந் திகதி முதல் 2015 யூலை 31 ஆந் திகதி வரை சுகாதார, சுதேச மருத்துவ நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவை மற்றும் மகளிர் விவகார அமைச்சின் செயலாளருக்கு ரூபா 30,430 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மொனராகலை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய 53-1518 ஆம் இலக்க கெப் வண்டிக்காக 2014 மார்ச் முதல் 2015 யூலை வரை 06 எரிபொருள் கட்டளைகள் மூலம் வழங்கப்பட்ட ரூபா

18,368 பெறுமதியான 160 லீற்றர் எரிபொருள் அந்த கெப் வண்டியின் ஓட்டக் குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 யூலை 11 ஆந் திகதிய 11/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனமொன்று உரித்துடைய உத்தியோகத்தரொருவருக்கு குழாம் வாகனம் பயன்படுத்த முடியாதிருந்த போதிலும், வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலளரினால் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு மேலதிகமாக குழாம் வாகனம் பயன்படுத்தப்பட்டு 2015 சனவரி முதல் யூலை வரை ரூபா 110,200 பெறுமதியான 1160 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் ஒரே தினத்தில் உத்தியோகபூர்வ வாகனத்தையும் குழாம் வாகனத்தையும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

## 6.13 உள்ளூராட்சி நிறுவனங்களின் மேற்பார்வை

### 6.13.1 நிலுவை வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களில் ஆதனவரி மற்றும் ஏனைய நிலுவை வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 346,438,045 ஆகும்.

(ஆ) 1979 இன் 42 ஆம் இலக்க மாநகர சபை மற்றும் நகரசபை (திருத்திய) அதிகாரச்சட்டம் மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 129(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அறவிடவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 65,725,453 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 79,233,274 தொகைகள் என்பன உரிய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்குக் கிடைத்திருக்கவில்லை.

### 6.13.2 வழங்கப்பட்ட மிகை அறவீட்டு சான்றிதழ்களுக்காக அறவிடுவதற்குள்ள பணம்

மீளாய்வாண்டின் இறுதியில் ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி அதிகாரசபைகளில் உத்தியோகத்தர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் விதிக்கப்பட்ட மிகை விதிப்பிற்காக ரூபா 6,852,700 தொகை அறவிட வேண்டியிருந்தது.

## 7. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 7.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக மாகாண சபை செயல்நடவடிக்கைத் திட்டமொன்றைத் தயாரித்திருக்கவில்லை.

### 7.2 உள்ளகக் கணக்காய்வு

**7.2.1** மாகாண சபைக்குரிய 53 நிறுவனங்கள் தொடர்பாக 2015 ஆம் ஆண்டின்போது போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் 30 நிறுவனங்கள் தொடர்பாக செயற்படுத்தப்பட்ட உள்ளகக் கணக்காய்விற்குரிய அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**7.2.2** மீளாய்வாண்டிற்காக பின்வரும் நிறுவனங்களில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) ஊவா ஆளுநர் அலுவலகம்
(ஆ) அரசாங்க சேவை ஆணைக்குழு
(இ) பிரதி பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) அலுவலகம்
(ஈ) பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) அலுவலகம்
(உ) உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள்
(ஊ) பிரதேச செயலகங்கள்
(எ) வீதி அபிவிருத்தித் திணைக்களம்
(ஏ) 06 ஆயுர்வேத, வைத்தியாலைகள், 19 மத்திய மருந்தகங்கள் மற்றும் 01 மூலிகைத் தோட்டம்
(ஐ) தள வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள், மத்திய மருந்தகங்கள் மற்றும் சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்கள்

## 7.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

**7.3.1** 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவனங்கள், முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனம், ஊவா மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பதுளை மற்றும் மொனராகலை பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகம் போன்ற நிறுவனங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**7.3.2** 2015 ஆம் ஆண்டின் போது நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

## 7.4 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக மாகாண சபையினால் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7.5 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

கடந்த ஆண்டுகளில் ஊவா மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் மாகாண சபையில் சமர்ப்பித்தலின் நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஆண்டு | அறிக்கை வழங்கப்பட்ட திகதி | சபையில் முன்வைக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 2008 | 2010.08.31 | 2011.01.20 |
| 2009 | 2011.08.27 | 2011.10.13 |
| 2010 | 2012.09.12 | 2012.12.13 |
| 2011 | 2014.02.11 | 2014.06.19 |
| 2012 | 2014.08.27 | 2015.04.23 |
| 2013 | 2015.02.10 | 2016.04.28 |
| 2014 | 2015.09.21 | 2016.07.14 |

## 7.6 முற்பணக் கணக்குகளின் எல்லை

மாகாண சபையின் 04 அலுவலகங்களில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான கடன் மற்றும் முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்கான வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்ட பெறுவனவுகளின் ஆகக்குறைந்த எல்லை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

| நிறுவனத்தின் பெயர் | ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தினால் அதிகாரம் வழங்கப்பட்ட பெறுவனவுகளின் ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியான பெறுவனவுகள் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்) அலுவலகம் | 1,400,000 | 3,246,975 |
| அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | 700,000 | 1,897,979 |
| பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) அலுவலகம் | 1,500,000 | 2,204,427 |
| ஆளுநர் அலுவலகம் | 800,000 | 1,705,114 |
| மொத்தம் | 4,400,000 | 9,054,495 |

## 8. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் மாகாண சபையின் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) மாகாண சபை அபிவிருத்தி திட்டம்
(ஈ) உள்ளகக் கட்டுப்பாடு
(உ) உள்ளூராட்சி அதிகாரசபைகளின் மேற்பார்வை
(ஊ) பதவியணியினர் முகாமைத்துவம்
(எ) சொத்துகள் முகாமைத்துவம்
(ஏ) ஒப்பந்த முகாமைத்துவம்
(ஐ) மாகாண காணி முகாமைத்துவம்